1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, விரைச் செக்குகள் பெற்ற சங்கங்கள் மற்றும் தனி நபர்கள், எண்ணெய் விலை வெளி மார்க்கெட்டில் நன்கு உயர்வாக இருக்கிறபோது அவற்றை வெளி மார்க்கெட்டில் விற்பதற்குத்தான் முற்படுகிறார்கள். மாறுபட்ட நிலைமை இருந்தால்தான் கதர் வாரியத்தை அணுகி எண்ணெய் விற்பனை செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். ஆகவே அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப கதர்த்துறை உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

ஊமை, குருடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்.

22—(*வினா எண் 5065) திரு. க. சோலைராசு: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊமை, குருடர் போன்றவர்களை ஊக்குவிக்க துறையின் மூலம் வேலை வாய்ப்பு வழங்குகிற திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதற்கு முன்பு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

உடல் ஊனமுற்றவர், ஊமை, குருடர் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது—

சிறப்பு வேலை பழகும் திட்டம்:

சிறப்பு வேலை பழகும் திட்டத்தின் கீழ் **(Special Apprenticeship Programme)** பயிற்சி பெற்ற வேலையில்லா விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் தங்களுடைய பெயர்களை 17—4—1979 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

களுக்கு, பல்வேறு தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுபவராக சேர்க்கப்பட்டு, பயிற்சி முடிந்த பின்பு அந்தந்த தொழில் நிறுவனங்களில் அவர்கள் நிரந்தர ஊழியராக எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

2. சுய வேலை வாய்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ், விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் ஊனமுற்றோர் இவர்களுக்கு நகரத்தின் பல இடங்களிலும், வெளியூர்களிலும், பெட்டிக்கடை (விற்பனை நிலையங்கள்) நிறுவ வங்கிக் கடனுதவி மற்றும் அரசு மானியமாக ரூ. 250—500 வரை வழங்கப்படுகிறது. மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு சுய வேலை வாய்ப்பின் பொருட்டு தங்களது வீடுகளில் சொந்தத் தொழில் நடத்துவதற்கு அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது. அவ்வாறு பயனடைந்த நபர் ஒருவருக்கு கடனுதவிக்கு சமமாகவும், அதிகபட்சம் ரூ. 1,000 அரசு மானியம் வழங்கப்படுகிறது.

3. வேலை வாய்ப்பில் ஒதுக்கீடு:

விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்பில் மூன்று சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

4. சென்னை, கிண்டியில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி மையத்தில் பொறிப்பகுதி பொருத்துதல் Fitter-*cum*-Basic Machine Operator புத்தகம் கட்டுதல் (Book-Binding) மற்றும் மின் கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பார்வையற்றவர்களுக்கு போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகின்றனர்.

5. சென்னை சாந்தோமில் அமைந்துள்ள உறைவிட வசதிகளுடன் கூடிய மறுவாழ்வு இல்லத்தில் ஆதரவற்ற 40 வயதுக்குக் குறைந்த பார்வையற்ற மகளிர்களுக்கு நெய்தல், சாக்கு கட்டி செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு

1987 நவம்பர் 10]

பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்பட்டு, அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. இதுவரை 294 பார்வையற்ற மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

6. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் மண்டல மறுவாழ்வு மையங்களில் (Regional Rehabilitation Centres) ஊனமுற்றவர்களை தொழில் நிறுவனங்களில் சேர்த்தல், சுய வேலை வாய்ப்பிற்கு கடனுதவி வாங்கித் தருதல் போன்ற சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. இதுவரை 24,922 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

7. உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி தந்து வேலை வாய்ப்பு வசதி பெறுவதற்காக, வட சென்னை தொழிற் கல்வி பயிற்சி மையத்தில், பிளம்பர் தொழிலுக்கும், அம்பத்தூர் தொழிற் கல்வி பயிற்சி மையத்தில் பெயிண்டர், பிட்டர், வரைவாளர் மற்றும் மெசினிஸ்ட் தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களில் தொலைபேசியை இயக்குகிற பணியைக் கண் பார்வையற்றவர்களுக்குக் கொடுக்கிற வகையிலும், காது கேளாதவர்களுக்கு அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு தருகிற வகையிலும் வயர் பின்னல் போன்ற பணிகள் தொடர்பாக நடைபெறக்கூடிய டெண்டர்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை அரசு ஆய்வுசெய்து பரிசீக்குமா என்பதையும், 3 சதவீதம் என்று அவர்களுக்காக ஒதுக்கி இருக்கிற வேலைவாய்ப்பு விழுக்காட்டை அதிகபட்சம் 5 சதவீதம் என்று ஒதுக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழி இழந்தவர்கள், காது கேளாதவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் 3 விழுக்காட்டை ஒதுக்கியிருக்கிறார்கள். மைய அரசு இதற்காகப் பாராட்டுகூடத் தெரிவித்திருக்கிறது. மேலும் இன்றைக்கு உடல் ஊனமுற்றவர்களை அவர்களுடைய நிலைமை

களுக்கேற்ப எங்கெங்கு பணிகளில் அமர்த்த முடியுமோ அதற்குரிய நடவடிக்கைகளை சமூக நல வாரியம் மேற்கொண்டு இருக்கிறது.

அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டுதல்.

23—*(வினா எண் 12946) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, அரசின் சார்பாக உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, தனியார் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் சென்னை மாநகரத்தில் எத்தனை விடுதிகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மூலம், பணி புரியும் பெண்களுக்காகக் கட்டப்பட்டுள்ள விடுதிகள் மொத்தம் தமிழகத்தில் ஆறு. தனியார் துறையின் மூலமாக மொத்தம் 39 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் எவ்வளவு விடுதிகள் செயல்படுகின்றன என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகராக இருக்கின்ற சென்னை போன்ற மிகப் பெரிய நகரத்தில் பல அலுவலகங்களில் பணிபுரிகிற பெண்